ஓம் அமிர்தேஸ்வரியே போற்றி!

# அமிர்த வித்யாலயம்

சீனியர் செகண்டரி பள்ளி (சிபிஎஸ்இ), திருப்பூர்.



## இணையவழித் திறனறித் தேர்வு 3. அக்-நவம்பர் 2020.

வகுப்பு : பத்து மொ.மதிப்பெண்கள்: 80

பாடம் : தமிழ் நாள் :02.11.2020 கால அளவு: 3:00மணி

---

**இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது.**

**பகுதி அ (40 மதிப்பெண்கள்)**

| | |
|---|---|
| 1.பத்தி படித்து விடை எழுதுக (பொது) | **5 X 1 = 5** |
| 2.பத்தி படித்து விடை எழுதுக (பொது) | **5 X 1 = 5** |
| 3.இலக்கணம் உதாரணம் தருக | **4 X 1 = 4** |
| 4.இலக்கணம் கூறியதைச் செய்க | **4 X 1 = 4** |
| 5.இலக்கணம் இலக்கணக் குறிப்பு தருக. | **4 X 1 = 4** |
| 6.இலக்கணம் கோடிட்ட இடங்களை நிரப்புக | **4 X 1 = 4** |
| 7.செய்யுள் படித்து விடை எழுதுக | **5 X 1 = 5** |
| 8.உரைநடை பத்தி படித்து விடை எழுதுக | **5 X 1 = 5** |
| 9.திருக்குறள் நிரப்புக | **4 X 1 = 4** |

அனைத்து வினாக்களும் பலவுள் தெரிவுசெய் வினாக்களாக அமைந்திருக்கும்.

**பகுதி ஆ (40 மதிப்பெண்கள்)**

| | |
|---|---|
| 10.செய்யுள் சிறுவினாக்களுக்கு விடை தருக | **2 X 3 = 6** |
| 11.உரைநடை நெடுவினாக்களுக்கு விடை தருக | **3 X 4 = 12** |
| 12.துணைப்பாடக் கட்டுரை எழுதுக | **1 X 7 = 7** |
| 13.படம் பார்த்து கவினுற எழுது | **1 X 3 = 3** |
| 14.கடிதம் எழுதுக | **1 X 6 = 6** |
| 15.பொதுக்கட்டுரை எழுதுக | **1 X 6 = 6**. |

பிரிவு எண் 13 ஐத் தவிர அனைத்துப் பிரிவுகளுக்கும் கூடுதல் வினாக்கள் கொடுக்கப்பட்டு இருக்கும்.

**பகுதி அ 40 + பகுதி ஆ 40 = மொத்த மதிப்பெண்கள் 80.**

## பகுதி அ (40 மதிப்பெண்கள்)

**1) கீழ்வரும் பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக. (5 X 1 = 5)**

சோழர்களின் புகழ் பெற்ற மன்னருள் முதலாம் இராசராசன் முதன்மையானவர். கி.பி 985 முதல் கி.பி 1012 வரை சோழ நாட்டைப் பெரும் புகழுடன் ஆட்சி புரிந்தவர் மாமன்னர் இராசராசன். இராசராச சோழன் இடைக்காலச் சோழ மன்னர்களில் மிக உன்னதமானவர். இவர் கி.பி 957 முதல் கி.பி 973 வரை சோழநாட்டை ஆண்ட சுந்தர சோழனுடைய இரண்டாவது மகனாவார். சுந்தர சோழனுக்கும் சேர நாட்டு வானவன் மாதேவிக்கும் ஐப்பசித் திங்கள் சதய நன்னாளில் பிறந்த இவரது இயற்பெயர் “அருண்மொழிவர்மன்”. இவர் ஆட்சியின் மூன்றாம் ஆண்டு முதலே இராசராச சோழன் எனப்பட்டார். (973) தந்தை இறந்ததும் இவர் உடனடியாகப் பதவிக்கு வரவில்லை. 12 வருடகால உத்தம சோழனின் ஆட்சிக்குப் பின்னரே இவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். விசயாலய சோழன் நிறுவிய சோழ அரசு இவர் காலத்திலும், இவர் மகன் இராசேந்திர சோழன் காலத்திலும் மிக உயர்நிலை எய்தியது. இராசராசனின் காலம் பிற்காலச் சோழர் வரலாற்றில் மட்டுமின்றித் தென்னிந்திய வரலாற்றிலேயே ஒரு பொற்காலம் ஆகும்.

**வினாக்கள்** :

i) இராசராச சோழன் எத்தனை ஆண்டு காலம் சோழநாட்டை ஆட்சி செய்தார்?

அ) 26 ஆண்டுகள்

ஆ) 27 ஆண்டுகள்

இ) 28 ஆண்டுகள்

ஈ) 29 ஆண்டுகள்

ii) இராசராச சோழனின் இயற்பெயர் என்ன?

அ) சுந்தர சோழன்

ஆ) இராசவர்மன்

இ) சோழவர்மன்

ஈ) அருண்மொழிவர்மன்

iii) இப்பத்தியில் அடைப்புக் குறிக்குள் கொடுக்கப்பட்ட வருடம் எதைக் குறிக்கிறது?

அ) தந்தை இறந்த வருடம்

ஆ) ஆட்சிப் பொறுப்பை ஏற்ற வருடம்

இ) பிறந்த வருடம்

ஈ) இறந்த வருடம்

iv) தென்னிந்திய வரலாற்றின் பொற்காலம் எது?

அ) இராசேந்திர சோழர் காலம்

ஆ) சுந்தர சோழர் காலம்

இ) இராசராச சோழர் காலம்

ஈ) சோழர்கள் காலம்

v) உத்தம சோழன் ஆட்சி செய்த காலம் எது?

அ) 957 - 973

ஆ) 973 - 985

இ) 975 - 983

ஈ) 978 - 988

**2) கீழ்வரும் பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக். (5 X 1 = 5)**

வள்ளுவர் கோட்டம் புகழ் பெற்ற திருக்குறள் என்னும் நூலைத் தமிழுக்குத் தந்த சங்ககாலத் தமிழ்ப் புலவரான திருவள்ளுவருக்காகக் கட்டப்பட்டுள்ள ஒரு நினைவகம் ஆகும். இது தமிழ்நாட்டின் தலை நகரான

சென்னையில், கோடம்பாக்கம் எனும் பகுதியில் அமைந்துள்ளது. இந்த நினைவகம் 1976 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. இங்கு பலரையும் கவர்வது திருவாரூர்க் கோவில் தேரின் மாதிரியில் கட்டப்பட்டுள்ள சிற்பத் தேர் அமைப்பாகும். இதன் அடிப்பகுதி 25 X 25 அடி (7.5 X 7.5 மீட்டர்) அளவு கொண்ட பளிங்குக் கல்லால் ஆனது. இது 128 அடி (39 மீட்டர்) உயரம் கொண்டது. 7 அடி (2.1 மீட்டர்) உயரமான இரண்டு யானைகள் இத்தேரை இழுப்பதுபோல அமைக்கப்பட்டுள்ளது. தேரின் ஒவ்வொரு பக்கத்திலும் தனித்தனிக் கல்லில் செதுக்கப்பட்ட நான்கு சக்கரங்கள் காணப்படுகின்றன. தேரின் ஓரங்களில் உள்ள சக்கரங்கள் மிகப் பெரியவை, ஒவ்வொன்றும் 11.25 அடி (3.43 மீட்டர்) குறுக்களவும், 2.5 அடி (0.76 மீட்டர்) தடிப்பும் கொண்டவை. நடுவில் அமைந்துள்ள இரு சக்கரங்களும் சிறியவை.

**வினாக்கள்** :

i) சென்னையில் அமைந்துள்ள திருவள்ளுவருக்கான நினைவகம் எது?

அ) திருவாரூர்க் கோவில்

ஆ) வள்ளுவர் கோட்டம்

இ) வள்ளுவர் சிலை

ஈ) கல்வெட்டு

ii) சிற்பத்தேர் மாதிரியின் அடிப்பகுதி எதனால் ஆனது?

அ) கருங்கல்

ஆ) பளிங்கு

இ) பாறை

ஈ) சிமெண்ட்

iii) தேரை இழுப்பதுபோல் அமைந்துள்ள விலங்கு எது?

அ) எருது

ஆ) யானை

இ) புலி

ஈ) குதிரை

iv) தேரின் உயரத்தைக் குறிப்பிடுக.

அ) 11.25 அடி

ஆ) 125 அடி

இ) 7அடி

ஈ) 128 அடி

v) திருவள்ளுவர் எவ்வாறு போற்றப்படுகிறார்?

அ) பாவேந்தர்

அ) பொய்யாமொழிப் புலவர்

இ) கவிமணி

ஈ) பண்டிதமணி

**3) சான்று தருக. (1 X 4 = 4)**

i) இன்னிசை அளபெடை

அ) உறாஅர்

ஆ) உரனசைஇ

இ) ஓஒதல்

ஈ) கெடுப்பதூஉம்

ii) அன்மொழித் தொகை

அ) முறுக்கு மீசை வந்தார்

ஆ) மலர்க்கை

இ) செங்காந்தள்

ஈ) தேர்ப்பாகன்

iii) பெயரெச்சத் தொடர்

அ) நண்பா படி

ஆ) கேட்ட கவிதை

இ) காற்று வீசியது

ஈ) பாடினாள் கண்ணகி

iv) திணை வழாநிலை

அ) கண்ணன் வந்தது

ஆ) கண்ணன் வந்தான்

இ) கண்ணன் வந்தாள்

ஈ) வந்தாள் கண்ணன்

**4) கூறியவாறு செய்க. (1 X 4 = 4)**

i) கெடுவான் கேடு நினைப்பான் (முதனிலை திரிந்த தொழிற்பெயரை எடுத்து எழுதுக)

அ) கெடு

ஆ) நினை

இ) கேடு

ஈ) வான்

ii) பைங்கிளி (பிரித்து எழுதுக)

அ) பசுங் + கிளி

ஆ) பைங் + கிளி

இ) பசுமை + கிளி

ஈ) பசு + கிளி

iii) மயில் கூவும் (மரபு வழாநிலை ஆக்குக)

அ) மயில் அகவும்

ஆ) மயில் கீச்சிடும்

இ) மயில் பேசும்

ஈ) மயில் கத்தும்

iv) தாமரை (இரு பெயரொட்டுப் பண்புத்தொகை ஆக்குக)

அ) செந்தாமரை

ஆ) மலர் தாமரை

இ) தாமரை மலர்

ஈ) நற்றாமரை

**5) இலக்கணக் குறிப்பு தருக. (1 X 4 = 4)**

i) மாதவி உண்டான்

அ) திணை வழு

ஆ) பால் வழு

இ) இடவழு

ஈ) காலவழு

ii) கொல்களிறு

அ) பண்புத்தொகை

ஆ) உவமைத்தொகை

இ) வினைத்தொகை

ஈ) உம்மைத்தொகை

iii) வெ...குவார்க்கில்லை

அ) செய்யுளிசை அளபெடை

ஆ) இன்னிசை அளபெடை

இ) ஒற்றளபெடை

ஈ) சொல்லிசை அளபெடை

iv) அந்தமான்

அ) தனிமொழி

ஆ) பொதுமொழி

இ) தொடர்மொழி

ஈ) எதுவுமில்லை

**6) கோடிட்ட இடங்களை நிரப்புக. (1 X 4 = 4)**

i) சுரமும் சுரம் சார்ந்த இடமும் __________

அ) குறிஞ்சி

ஆ) பாலை

இ) மருதம்

ஈ) முல்லை

ii) உயிரளபெடை __________ வகைப்படும்.

அ) இரண்டு

ஆ) நான்கு

இ) மூன்று

ஈ) ஏழு

iii) காலம் கரந்த பெயரெச்சமே __________ ஆகும்.

அ) வினைத்தொகை

ஆ) பண்புத்தொகை

இ) உவமைத்தொகை

ஈ) உம்மைத்தொகை

iv) அஃறிணையில் ஒன்றனைக் குறிப்பது __________ ஆகும்.

அ) ஆண்பால்

ஆ) பலவின்பால்

இ) பலர்பால்

ஈ) ஒன்றன்பால்

**7) பின்வரும் செய்யுள் பகுதியைப் படித்து அதன் அடியிற் காணும் வினாக்களுக்கு விடையளி** : **(5 X 1 = 5)**

வெய்யோன் ஒளி தன் மேனியில் விரி சோதியில் மறையப்
பொய்யோ எனும் இடையாளொடும் இளையானொடும் போனான்:
மையோ? மரகதமோ? மறிகடலோ? மழை முகிலோ?
ஐயோ இவன் வடிவு என்பது ஓர் அழியா அழகு உடையான்.

**வினாக்கள்** :

i) இப்பாடல் இடம் பெற்றுள்ள செய்யுளின் பெயர் என்ன?

அ) தமிழ்விடு தூது

ஆ) மலைபடுகடாம்

இ) காசிக்காண்டம்

ஈ) கம்பராமாயணம்

ii) இந்நூலின் ஆசிரியர் யார்?

அ) சாத்தனார்

ஆ) கம்பர்

இ) பெருங்கௌசிகனார்

ஈ) சேக்கிழார்

iii) 'வெய்யோன்' என்ற சொல்லின் பொருள் என்ன?

அ) பகலவன்

ஆ) தென்னவன்

இ) மன்னவன்

ஈ) அன்னவன்

iv) இச்செய்யுள் யாரைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்டது?

அ) சிவன்

ஆ) பார்வதி

இ) இராமன்

ஈ) இலக்குவன்

v) ஒப்பற்ற அழியாத _________ உடைய வடிவு கொண்டவன்.

அ) வீரம்

ஆ) அழகு

இ) வலிமை

ஈ) கல்வி

**8) பின்வரும் உரைநடைப் பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. (5 X 1 = 5)**

மொழிபெயர்ப்பைக் கல்வியாக ஆக்குவதன் மூலம் அனைத்துலக அறிவையும் நாம் எளிதாகப் பெறமுடியும்; பல அறிவுத்துறைகளுக்கும் தொழில் துறைகளுக்கும் வெளிநாட்டாரை எதிர்பார்க்காமல் நாமே நமக்கு வேண்டிய அனைத்தையும் உருவாக்கிக்கொள்ள முடியும்; மனித வளத்தை முழுமையாகப் பயன்படுத்தமுடியும்; வேலைவாய்ப்புத் தளத்தை விரிவாக்க முடியும்; நாடு, இன, மொழி எல்லைகள் கடந்து ஒருலகத்தன்மையைப் பெறமுடியும். நாடு விடுதலை பெற்ற பிறகு பல நாட்டுத் தூதரகங்கள் நம்நாட்டில் நிறுவப்பட்டன. அவை தங்களுடைய இலக்கியம், பண்பாடு, தொழில்வளர்ச்சி, கலை போன்றவற்றை அறிமுகப்படுத்தும் நோக்கில் தத்தம் மொழிகளைக் கற்றுக்கொடுக்கின்ற முயற்சியை மேற்கொண்டு வருகின்றன. இதனைச் சார்ந்து பிற மொழிகளைக் கற்றுத்தரும் தனியார் நிறுவனங்களும் உருவாகியுள்ளன. பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் பிறமொழிகளைக் கற்கும் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

**வினாக்கள்** :

i) மொழிபெயர்ப்பைக் கல்வியாக ஆக்குவதன் மூலம் எதை நாம் எளிதாகப் பெறலாம்?

அ) அனைத்துலக அறிவை

ஆ) அனைத்துலக ஆற்றலை

இ) அனைத்துலகப் பள்ளிகளை

ஈ) அனைத்துலகக் கல்லூரிகளை

ii) மொழிபெயர்ப்புக் கல்வியால் நாம் மனித வளத்தை எப்படிப் பயன்படுத்த முடியும்?

அ) முறையாக

ஆ) முழுமையாக

இ) பாதியளவு

ஈ) குறைவாக

iii) மொழிபெயர்ப்புக் கல்வியால் எந்தத் தளத்தை விரிவாக்கம் செய்ய முடியும்?

அ) விளையாட்டு

ஆ) நீச்சல்

இ) மலையேற்றம்

ஈ) வேலைவாய்ப்பு

iv) மொழிபெயர்ப்புக் கல்வியால் எல்லைகளைக் கடந்து, எப்படிப்பட்ட தன்மையைப் பெறமுடியும்?

அ) ஒருலகத்தன்மை

ஆ) ஈருலகத்தன்மை

இ) மூவுலகத்தன்மை

ஈ) நான்குலகத்தன்மை

v) பள்ளி கல்லூரிகளில் எப்படிப்பட்ட வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன?

அ) தாய்மொழிகளைக் கற்கும்

ஆ) பிறமொழிகளைக் கற்கும்

இ) சைகைமொழிகளைக் கற்கும்

ஈ) செம்மொழிகளைக் கற்கும்

**9) பின்வரும் மனப்பாடக் குறட்பாக்களைச் சரியான சீர்களால் நிரப்புக. (4 X 1 = 4)**

i) முயற்சி ____________ ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.

அ) ஒருவினை

ஆ) திருவினை

இ) மறுவினை

ஈ) இருவினை

ii) பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் ____________ விடல்.

அ) தொடர்கை

ஆ) படர்கை

இ) இடர்கை

ஈ) நடர்கை

iii) இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்
இன்மையே ____________ தது.

அ) மன்னா

ஆ) அண்ணா

இ) இன்னா

ஈ) உண்ணா

iv) குன்றேறி ____________ கண்டற்றால் தன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை.

அ) புலிப்போர்

ஆ) சிங்கப்போர்

இ) யானைப்போர்

ஈ) மான்போர்

## பகுதி ஆ (40 மதிப்பெண்கள்)

**10) பின்வரும் செய்யுள் வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக. (2 X 3 = 6)**

i) முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.

ii) கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?

iii) தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?

iv) செங்கீரை ஆடிடக் குகனைக் குமரகுருபரர் அழைக்கும் முறையை விவரி.

**11) பின்வரும் உரைநடை வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக. (3 X 4 = 12)**

i) தாவரங்களின் அடிப்பகுதி மற்றும் கிளைப் பிரிவுகளுக்குத் தமிழில் உள்ள சொல் வளத்தை எழுதுக.

ii) ஏழ்மையிலும் விருந்தோம்பிய தமிழர் பண்பாட்டை விவரி.

iii) தற்காலத்தில் வளர்ந்துள்ள மின்னணுப் புரட்சி குறித்து விளக்குக.

iv) பல்துறை வளர்ச்சியில் மொழிபெயர்ப்பின் பங்கு குறித்து விளக்கி எழுதுக.

v) காற்றின் பயன்களையும், அதைக் காக்க நாம் செய்ய வேண்டியவற்றையும் குறித்தும் எழுதுக.

**12) பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றைக் குறித்துத் துணைப்பாடக் கட்டுரை எழுதுக. (1 X 7 = 7)**

i) ‘கோபல்ல புரத்து மக்கள்’ காட்டிய மனித நேயம்.

ii) ‘பாய்ச்சல்’ சிறுகதைச் சுருக்கம்.

iii) ’விண்ணைத் தாண்டிய தன்னம்பிக்கை’ தரும் பாடம்.

**13) கொடுக்கப்பட்டுள்ள காட்சியினைக் கண்டு பத்து தொடர்கள் கவினுற எழுதுக. (1 X 3 = 3)**



**14) ஏதேனும் ஒரு கடிதம் மட்டும் எழுதுக. (1 X 6 = 6)**

i) குடிநீர் வசதிவேண்டி மாநகராட்சித் தலைவருக்கு ஒரு கூட்டு விண்ணப்பம் எழுதுக.

ii) மாசு இல்லாத தீபஒளித் திருநாளைக் கொண்டாடும்படி உன் நண்பன் / தோழிக்கு ஒரு விழிப்புணர்வுக் கடிதம் எழுதுக.

iii) உன் ஊருக்கு நூலகம் அமைத்துத்தர வேண்டி நூலக ஆணையருக்கு ஒரு மின்னஞ்சல் கடிதம் எழுதுக.

( உங்கள் பெயர் முருகன் / பூங்கோதை என்றும், முகவரி 19, பாரதி தெரு, வ.உ.சி நகர், பாளையங்கோட்டை " என்றும், உங்கள் மின்னஞ்சல் முகவரி தமிழ்@ஜிமெயில்.காம் என்றும் இருத்தல் வேண்டும் )

**15) பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒரு பகுதியின் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக. (1 X 6 = 6)**

i) தலைப்பு - முன்னுரை - பாரதியின் பா நலம் - தேசிய ஈடுபாடு - புதுநெறி காட்டிய பாரதி - சமுதாய சிந்தனைகள் - தீர்க்கதரிசி - அழியாக் கவிதை - முடிவுரை.

ii) தலைப்பு - முன்னுரை - மின்சாரம் தயாரிப்பதில் பலவகை முறைகள் - என்றும் கிடைக்கும் சூரிய சக்தி - புதுப்பிக்கத்தக்க எரிசக்தி - மக்களுக்கு விழிப்புணர்வு - தொழில் வளர்ச்சி - பொருளாதாரத்தில் அதன் பங்கு - முடிவுரை.

iii) முன்னுரை - நீர் மாசு - நிலம் மாசு - காற்று மாசு - ஓசோன் பேரழிவு - அறிவியலால் மாசு - உலக வெப்பநிலை உயர்வு - மழை இல்லாமை - வறட்சி - கடல்மட்டம் உயர்வு - மரங்கள் - மழை மேகம் - குளிர்ச்சி - முடிவுரை.

**.................................வளம்மிகு தேர்வில் நலம்பெற்று உயர்க!............................**